*கவனிக்க.- 2018.06.14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2077 - 2018 ජූනි මස 22 වැනි සිකුරාදා - 2018.06.22

*2077 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 976 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 980 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2018, யூலை மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, யூன் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

975- B81424- 5,403(2018/06)

# பதவிகள் - வெற்றிடம்

**சூரியவெவ பிரதேச சபை**

சூரியவெவ பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள தென் மாகாண அரச சேவையின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய கனிஷ்ட சேவையின் ஆரம்ப நிலைக் கலைஞர்கள் / கலைத் துறையைச் சேராத பல சேவைப் பிரிவுகளுக்குட்பட்ட கீழே குறிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு தகுதி வாய்ந்தவர்களை தேர்ந்தெடுப்பதற்காக உரிய தகுதியுடையவர்களை சூரியவெவ பிரதேச சபையின் வலுப்பிரதேசத்தின் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதுண்டு.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மாதாந்த சம்பள அளவு | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1. | சாரதி III வகுப்பு | 01 | உ. ஆ. நி. சு. அ. 03/2016 யின் படி ரூபா 25,790 - 10X270-10X300 -10X330 - 12X350 ரூபா 38,990 | 01. இரு தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சாதாரணதர) பரீட்சையில் விஷேட சித்தி இரண்டுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>02. அனைத்து வாகனங்களையும் ஓட்டுவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட சாரதி உத்தரவுப்பத்திரம் மற்றும் திறமைச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>03. மோட்டார் வாகன சாரதி உத்தரவுப் பத்திரம் பெற்றதன் பின் குறைந்தது 03 வருட கால பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். |
| 2. | வேலையாள்/ வெளிக்கள ஊழியர் | 01 | உ. ஆ. நி. சு. அ. 03/2016 யின் படி ரூபா 24,250 - 10X250 - 10X270-10X300 - 12X330 - ரூபா 36,410 | (1) 8 ஆம் தர (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் |
| 3. | சுகாதார ஊழியர் | 01 | உ. ஆ. நி. சு. அ. 03/2016 யின் படி ரூபா 24,250 - 10X250 - 10X270-10X300 12X330 - ரூபா 36,410 | (1) 8 ஆம் தர (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் |

**சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது;

(ii) இப்பதவி 03 வருட பயிற்சி காலத்திற்கு உட்பட்டதாகும்;

(iii) இந்த ஆட்சேர்ப்பு கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகளைத் தவிர இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிருவாகக் கோவையின் கட்டளைகளுக்கும் மற்றும் நிதிக் கட்டளைகளுக்கும் அரச மற்றும் தென் மாகாண சபை மற்றும் சூரியவெவ பிரதேச சபையினால் விதிக்கப்படும் வேறு கட்டளைகளுக்கும் மற்றும் கொள்கைகளுக்கும் அனுசரித்து செயற்பட அனைத்து ஊழியர்களும் இணைந்திருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :**

1. விண்ணப்பதாரிகள் பரம்பரை மூலம் அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
2. நன்னடத்தையுடையவராகவும், நல்ல சரீர சுகத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்;
3. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு கிட்டத்தட்ட 03 வருட காலத்திற்கு சூரியவெவ பிரதேச சபை வலுப்பிரதேசத்தினுள் வதிவாளர் என்பதை சான்றுபடுத்துதல் வேண்டும்;

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாததும் 45 வயதுக்கு கூடாததுமாக இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் வயது எல்லை கணிக்கப்படமாட்டாது;
5. தேவைக்கு ஏற்ற விதத்தில் எழுத்துமூல /அமைப்பு /செயல் முறை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் தகுதியுடையவர்களை தேர்ந்தெடுக்கப்படும்;
6. நீதி குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதி மன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டவராக அல்லது அரச சேவையிலிருந்து /மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டவராக இருத்தல் கூடாது;
7. சேவை திறன் பெற்றவர்கள் தொடர்பாக முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கப்பட வேண்டிய முறை :-**

(அ) இவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை 2018.07.10 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதமாக 'தலைவர், சூரியவெவ பிரதேச சபை, சூரியவெவ' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியை குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமாகி அல்லது நிபந்தனைகளுக்கு உட்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவதுண்டு.

(ஆ) விண்ணப்பப்படிவங்களுடன் கீழே குறிப்பிடப்படும் சான்றிதழ்களின் படப்பிரதிகள் இணைக்கப்பட வேண்டியதோடு, நேர்முகப் பரீட்சையின் போது மூலப் பிரதிகள் முன்வைக்கப்படல் வேண்டும்.

01. பிறப்புச் சான்றிதழ்;
02. கல்விச் சான்றிதழ்;
03. வதிவினை உறுதிப்படுத்த கிராம அலுவலரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் (பிரதேச செயலாளரின் உறுதியுடன்);
04. சமீப காலத்தில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு;
05. பயிற்சிச் சான்றிதழ்;
06. பதவிக்கு உகந்தவாறு திறமைச் சான்றிதழின் பிரதி.

பூர்த்தியாக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு, பிரதான தகுதிகளை பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுண்டு.

ஜே. எரன்த ஜனக்க,
தலைவர்,
சூரியவெவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
சூரியவெவ.
2018, மே 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சூரியவெவ பிரதேச சபை**

.......................................................................... பதவி

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) :- ..........................................................................................

2. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் :- ..........................................................................................

3. நிரந்தர விலாசம் : ..........................................................................................................................................

4. பால் : ஆண் /பெண் : ......................................................................................................................................

5. திருமணமானவரா ?/ திருமணமாகாதவரா ? : ..............................................................................................

6. I. பிறந்த திகதி :-
II. 2018.07.10 ஆந் திகதிக்கு வயது வருடங்கள் : ........................... மாதங்கள் : .............................. நாட்கள் : ..............................

7. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

8. இனம் :-..........................................................................................................................................................

9. இலங்கை பிரசையா? அவ்வாறாயின் பிரசா உரிமை மூலமா ? பதிவின் மூலமா ? ...........................................................................

10. சூரியவெவ பிரதேச சபை வலுப்பிரதேசத்தின் வதிவு காலம் :-.................................................................................

11. கல்வித் தகைமைகள் :-.................................................................................................................

12. தேர்ச்சி தொடர்பான விடயம் :-

| சேவை செய்த பதவி | சேவை புரிந்த இடம் | சேவை செய்த காலம் |
|---|---|---|
| ................................ | ................................ | ................................ |
| ................................ | ................................ | ................................ |

13. வேறு தகைமைகள் :-..........................................................................................................................................

14. குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் தண்டனைக்குட்பட்டுள்ளீரா ? ..............................................................................

அவ்வாறாயின் விபரம் :- ...........................................................................................................................

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மையானதும் அதில் ஏதும் பிழை இல்லை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேற்குறித்த தகவல்களில் எவையாயினும் பிழையானது எனத் தெரியவந்தால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின் தெரியவந்தால் எனது நியமனம் எந்த வித தண்டப் பணமும் செலுத்தாது இரத்துச் செய்யப்பட, வேலையிலிருந்து நீக்கப்பட ஏதுவாகும் என நான் அறிவேன். நான் நீதிமன்றத்தில் எவ்வித குற்றவியல் நடவடிக்கைகளுக்கும் உட்பட்டில்லை என்பதாகவும், எனது வழக்கமான கையொப்பத்தை இட்டு சான்றுபடுத்துகின்றேன்.

.....................................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ...........................

06 - 861

---

**பாலிந்தநுவர பிரதேச சபை**

மேல்மாகாண அரச சேவைகளில் வெற்றிடம் நிரப்புதல்

மேல்மாகாண அரச சேவையில் பாலிந்தநுவர பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள கீழுள்ள பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வது சம்பந்தமாக இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமைகள் உள்ள மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களிடம் விண்ணப்பம் கோரப்படுகிறது.

| தொ. இல. | பதவியின் பெயர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் | பதவி நிலை |
|---|---|---|---|---|---|
| 01. | அலுவலக சேவை உதவி யாளர் III | 01 | PL -1-2016 ரூபா 24,250 - 10X250 10X270 - 10X300 - 12X330 - ரூபா 36,410 | கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு முறைக்கு மேற்படாத நிலையில் குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல். (இதில் குறைந்த பட்சம் ஒரே முறையில் 5 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் | நிரந்தர ஓய்வூதிய சம்பளத்துடன் |

02. உடற்றகைமைகள் :- பதவியில் அரசகடமையை நிறைவேற்ற உடல், உளரீதியாக தகைமைகள் உள்ளவராக இருத்தல்.

03. தேவையான வேறு தகைமைகள் :-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்;
(ii) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்தில் நிரந்தரமாக தொடர்ந்து மூன்று வருடங்கள் மேல்மாகாணத்தில் வசித்தவராக இருத்தல் வேண்டும்;
(iii) நன்னடத்தை உள்ளவராக இருப்பதுடன் சிறந்த உடல் நலம் உடையவராக இருத்தல் வேண்டும்;
(iv) இலங்கை நீதிசட்ட முறைகளுக்கு கீழ் நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவராக இல்லாதிருத்தல் வேண்டும்;
(v) பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்காக தேவைப்படும் சகல தகைமைகளும் விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலில் / வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட தினத்திற்கு சகல வகையிலும் பூரணப்பட்டிருத்தல் வேண்டும்.

04. வயது :- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தில் 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராவும் இருத்தல் வேண்டும்.

05. ஆட்சேர்ப்புமுறை :- ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெற்ற ஒழுங்கு முறையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

06. விண்ணப்பம் உட்படுத்தல் :-

(i) விண்ணப்பதாரி இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ முறையில் தயாரித்துக் கொண்ட விண்ணப்பத்தை 2018.07.11 அல்லது அத்திகதிக்கு முன் 'செயலாளர், பாலிந்தநுவர பிரதேசசபை, பதுரலிய' எனும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்;
(ii) விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "அலுவலக சேவை உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக்குறிப்பிடப்படல் வேண்டும்;
(iii) விண்ணப்பத்துடன் கீழ்க்காணப்படும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைத்து அனுப்பப்படவேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்;
(ஆ) கல்விச்சான்றிதழ்;
(இ) பாடசாலை விடுகைப்பத்திரம்;
(ஈ) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் அத்தாட்சி (பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்);
(உ) அண்மையில் பெற்றுக்கொண்ட நன்னடத்தை சான்றிதழ்கள் 02.

இவ்விண்ணப்பம் கோரப்பட்ட பின்பு அல்லது கோரப்படும் இடைக்காலத்தில் ஆட்சேர்ப்பு அல்லது ஆட்சேர்ப்பை தாமதிக்க செய்தல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது இந்த அறிவித்தலை நிராகரித்தல் அல்லது திருத்தம் செய்தல் சம்பந்தமாக சகல அதிகாரங்களும் பாலிந்தநுவர பிரதேச சபை செயலாளருக்கு உரியது.

செயலாளர்,
பாலிந்தநுவர பிரதேச சபை.

2018, யூன் 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பாலிந்தநுவர பிரதேச சபை**

பாலிந்தநுவர பிரதேச சபையில் அலுவலக சேவை உதவியாளர் III பதவிக்கான விண்ணப்பம்

01. விண்ணப்பதாரியின் பெயர் முதல் எழுத்துக்களுடன் : ..........................................................................................

02. முதல் எழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் : ..........................................................................................

03. நிரந்தர முகவரி : ..........................................................................................

04. கிராம அலுவலர் பிரிவு : ......................................................................................

05. மாவட்டம் : ..................................................................................................................

06. பிறந்த திகதி :- ஆண்டு : ..................... மாதம் : ..................... திகதி : .....................

07. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும்
இறுதித் திகதியில் (2018. 07.11 ) வயது :- வருடங்கள் : ..................... மாதங்கள் : ..................... நாட்கள் : .....................

08. பால் : ஆண் /பெண் : ...........................

09. விவாகமானவர் /விவாகமாகாதவர் : ..................................

10. இலங்கைப் பிரசையா ? அப்படியானால் பரம்பரையாகவா? பதிவு முறையிலா என்ற விபரம் : ..............................................

11. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

12. தொலைபேசி இலக்கம் : .........................................................................................

13. கல்வித் தகைமைகள் : ..................................................

இவ்விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் விசுவாசத்திற்கும் உட்பட்ட முறையில் பிழையற்றவை என உறுதிப்படுத்துகிறேன். இவ்வாட்சேர்ப்பு நிபந்தனைகளின்படி என்னால் உண்மையான விபரங்கள் மறைக்கப்பட்டுள்ளதென ஆட்சேர்ப்பிற்கு முன் அல்லது பிறகு வெளியானால் எந்த விதமான நஷ்டஈடும் வழங்கப்படாமலே சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்,

திகதி : .................................

6 - 1067

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**மஹரகம நகர சபை**

*நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படியிலான அறிவித்தல்*

01. நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹரகம நகரசபையின் எல்லைகளில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்கு உரிய வீதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபை நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய கையகப்படுத்துவதற்கு.

02. பொதுமக்கள் அல்லது உரிய காணி உடைமையாளர்களிடமிருந்து இந்த விடயம் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகள் பொருட்டான காரணங்கள் வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரிசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் எழுத்தில் கொடுக்கப்படல் வேண்டும்.

03. குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் ஆட்சேபனைகள் எதுவும் தெரிவிக்கப்படாவிடில் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகரசபைக்கு சொந்தமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப்படும் என்று இத்தால் பொதுமக்களின் தகவல் பொருட்டு அறிவிக்கப்படுகின்றது.

டிராஜ் லக்றுவன் பியரத்ன,
தலைவர்,
மஹரகம நகரசபை.

2018, மே 31.

| தொ. இல. | திட்ட இலக்கம், திகதி மற்றும் நிலஅளவை யாளரின் பெயர் | வீதியின் பெயர் | கிராம அலுவலர் பிரிவு | வீதியின் நீளம் | வீதியின் அகலம் | வீதியின் ஆரம்பம் | வீதியின் முடிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | திட்ட இலக்கம் : 1838 துண்டு இல. 41, அதிகாரமுடைய நில அளவையாளர் திரு. டீ. எல். பீரிஸ் | ருக்மல் பன்சலை வீதி, தம்பகஹவத்தை 3 ஆவது ஒழுங்கை. | 497 ஏ ருக்மல் கிழக்கு | 96. 0மீ. | 6.0 மீ. | ருக்மல் பன்சலை வீதி | வரிப்பணம் இல. 110/4 வீடு |
| 02. | திட்ட இலக்கம் : 8596 2003 யூன் மாதம் 18 மற்றும் 20 ஆந் திகதி நில அளவையாளர் திரு. மர்வின் சமரநாயக (F. C. I) | கோட்டேமாதிவெலை தர்மரத்ன மாவத்தை, 3 ஆவது ஒழுங்கை. | 524 மாதிவெலை | அடி 360 | அடி 10 | வ. ப 229/1 | வ. ப 21/10 |
| 03. | திட்ட இலக்கம் : 651 2003.01.03 ஆந் திகதி திரு. பி. யூ. எஸ். பர்னாந்து அவர்களால் வரையப்பட்டது. | நாவின்ன புகையிரத நிலைய பாதை யிலிருந்து பத்திர கொடை ஜனதா மாவத்தை சந்திக்கும் வ. ப. 45/12 இலிருந்து வ. ப. 48/16 இல் முடிவடையும் குறுக்கு வீதி | 527/ஏ பத்திர கொடை | அடி 240<br>அடி 300<br>அடி 500 | அடி 15<br>அடி 12-10<br>அடி 12 | வ. ப 45/12 | வ. ப 48/16 |

06 - 752

---

**பதுளை மாநகர சபை**

1947 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 48 (1) ஆம் குறிப்புரையின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 48(1) ஆம் குறிப்புரைகள் பிரகாரம் ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தின் பதுளை மாநகர சபையால் பின்வரும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள வீதியானது பதுளை மாநகர சபைக்கு பொது பாவனை நிமித்தம் பொறுப்பேற்றுக் கொள்வதற்காக 2017.08.30 ஆந் திகதி குறிப்பிட்ட 9/12 ஆம் இலக்க முகாமைத்துவ கமிட்டி அனுமதியின்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதேசத்தின் பொது மக்களிடமிருந்தோ, இந்த வீதிக்குரிய காணிகளின், இடங்களின் உரிமையாளர்களின் சார்பில் ஆட்சேபனை தெரிவிப்பதாயின், இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 30 (முப்பது) நாட்களுக்குள் தமது ஆட்சேபனையை உரிய சாட்சியங்களுடன் எழுத்து மூலமாக மாநகர சபைக்கு அறிவிப்பதற்கு ஆவண செய்யுமாறு இத்தால் அறிவிக்கின்றேன்.

குறிப்பிட்ட காலத்துக்குள் அறிவித்தலின் பிரகாரம் செயற்படவில்லையாயின், ஆட்சேபனைகள் எதுவும் இல்லையென்பதாகக் கருத்தில் கொண்டு, இவ்வர்த்தமானி அறிவித்தலினூடாக குறிப்பிட்டவாறு கீழ்வரும் அட்டவணையில் பெயர்க் குறிப்பிடப்பட்ட வீதியை, பதுளை மாநகர சபைக்குரிய வீதி என பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டு நிர்வகிக்கப்படும் என பகிரங்கமாக அறிவித்தல் செய்வதற்காக ஏற்பாடுகள் செய்யப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின்
286 'அ' பிரிவின் கீழ் அதிகாரம்
பெற்ற மாநகர ஆணையாளர்
மாநகர சபை பதுளை.

மாநகர சபை அலுவலகம்,
பதுளை,
2018, யூன் 01.

**அட்டவணை**

| தொ. இல. | வீதியின் பெயர் | ஆரம்பிக்கும் இடம் | முடியும் இடம் | இடப்பக்க வரிப்பண இல. | வலப்பக்க வரிப்பண இல. | நீளம் (மீற்றர்) | அகலம் (மீற்றர்) |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | கலுகல்பிட்டிய நாணயக்காரவத்த வீதி | ரத்தேகெவத்த வீதியில் 80 மீற். உள்நோக்கி சென்ற பின்னர் | வரிபண இல. 7/52 கயனி பிரசங்கிகாவின் வீட்டிற்கு அருகில் காணப்படும் சுற்று வட்டத்தில் | வரிபண இல. 71/52, 71/51, 65/1, 71/48, 65/1 | வரிபண இல. 71/53, 71/54, 71/55 | 22.5 மீற்றர் | முதல் 10 மீ = 3.6 மீ மிகுதி 12.5 மீ. = 6.0 மீ. |

6-863

---

திருத்தம்

**கடுவெல மாநகர சபை**

2018.02.16 ஆந் திகதிய 20159 ஆம் இலக்க வர்த்தமானியில் 552/1 முதல் 552/10 ஆம் இலக்கம் வரையிலான உள்ளூராட்சி அறிவித்தல்களில் நகர ஆணையாளரினால் கையொப்பமிடப்பட்ட திகதி "2018 சனவரி மாதம் 30 ஆந் திகதி, கடுவெல மாநகர சபையில்" என திருத்தப்படுதல் வேண்டும்.

சஞ்ஜீவ பந்துகீர்த்தி,
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை, கடுவெல.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல,
2018, யூன் 05.

06 - 864

---

**ருவன்வெல்லை பிரதேச சபை**

வீதிகளுக்குப் பெயரிடுதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

1975 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வீதிகளுக்குப் பெயரிடுதல் மற்றும் நினைவுச் சின்னங்களை நிறுவுதல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆம் பிரிவின் படி 2015.11.26

ஆந் திகதிய கடிதம் மூலம் சப்பிரகமுவ மாகாணத்தின் கௌரவ முதலமைச்சரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிக்காக முன்மொழியப்பட்டுள்ள எஸ். எம். உப்புல் பிரியதர்ஷன செனரத் மாவத்தை எனும் பெயர் உபயோகிக்கப்படுமென பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

| *தொடர் இல.* | *பெயரிடப்பட்ட வீதி* | *முன்மொழியப்பட்ட பெயர்* |
|---|---|---|
| *01.* | லெவன்கம தபால் அலுவலகத்தின் அருகில் ஆரம்பித்து கொட்டமுகொட கந்த பன்சலை வரையிலான வீதி | எஸ். எம். உபுல் பிரியதர்ஷன செனரத் மாவத்தை |

எல். எச். சுதத் மஞ்ஜுல,
தவிசாளர்,
ருவன்வெல்லை பிரதேச சபை.

*6-918*